யுனிசெப்

ஐக்கிய நாடுகள்
மனித உரிமைகள்
நிலையம்

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

# சிறுவர் உரிமைகளும் வீணாகும் வாய்ப்புகளும்

மக்களின் வாழ்க்கையைக் காக்கவும் வளப்படுத்தவும் எத்தனையோ வாய்ப்புகள் இருந்தும் நடைமுறையில் எதையும் செய்வதற்கு அக்கறை காட்டாத நிலையில் சர்வதேச சமுதாயம் 21 ஆம் நூற்றாண்டை அணுகுகின்றமை வெட்கப்பட வேண்டியதொன்றாகும். அதிலும், கெடுபிடி யுத்தம் பழங்கதையாகி சனநாயகக் கொள்கைகள் தழைத்தோங்கி வரும் இன்றைய கட்டத்திலே மனிதன் தன் கற்பனை வளத்தினாற் புதுப்புதுக் கொடுமைகளைப் பிறர்மீது - குறிப்பாகப் பெண்கள் மீதும் சிறுவர்கள் மீதும் - தயக்கமின்றிப் புரிவதானது மிகவும் கவலையளிப்பதாயுள்ளது. வயது வந்தவர்கள் மனித உரிமைகள் மீறப்படுவதைத் தடுக்கும் பொருட்டு ஆவன யாவற்றையும் செய்ய முயலாமல் வாளாவிருப்பது மன்னிக்க முடியாததொன்றாகும். பொருளாதார, சமூக, கலாசார, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பகிர முடியாதவை, உலகளாவியவை என்பதைச் சர்வதேச மனித உரிமைச் சாசனமும் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயமும் ஐயந்திரிபற அங்கீகரித்துள்ளன. எனினும், ஒவ்வொரு பிராந்தியத்திலுமுள்ள அநேகமான எல்லா நாடுகளும் இவற்றைத் தினந்தோறும் மீறியேவருகின்றன.

ஐக்கிய நாடுகளின் சிறுவர்களுக்கான முகவர் நிலையம் என்ற வகையிலும், சிறுவர்களின் தேவைகளையும் நலன்களையும் கண்காணிக்கும்படி சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தினால் பணிக்கப்பட்ட முகவர் நிலையங்களில் ஒன்று என்ற வகையிலும் இரண்டு தீர்க்கமான அவசர விடயங்களில் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்) ஏககாலத்தில் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது. ஒன்று அவலக் குரல் எழுப்பும் அவசரப் பிரச்சினை. இதில் கோடிக்கணக்கான சிறுவர்களைக் கொன்றும், இடம் பெயர்த்தும், ஊனமாக்கியும் கொடுமை விளைவிக்கும் ஆயுதப் போராட்டங்களும் இயற்கை உபாதைகளும் அடங்குகின்றன. மற்றொன்று, தீராத வறுமை, நோய், அறியாமை, பற்றாக்குறையான சேவைகள் ஆகியவற்றினால் ஏற்படும் அவசரப் பிரச்சினை; இதில் மரணிப்போரின் எண்ணிக்கை, பஞ்சம் வெள்ளப்பெருக்கு அல்லது போர் போன்ற வெளிப்படையாகத் தெரியும் அழிவுகளால் இறப்போரிலும் கூடுதலாகும். ஆயினும் இவை தலைப்புச் செய்திகளாக முக்கியம் பெறுவதில்லை.

## அவலக்குரல் எழும்பும் அவசர நிலைமைகள்

யுனிசெப் மூலமாக மனிதாபிமான நிவாரணம் பெறும் பொருட்டு அவலக்குரல் எழுப்பிய அவசர நிலைமைகளில் பின்வருவன மிகச் சமீபத்தியனவாகும். ஆப்கானிஸ்தான், கம்போடியா, மத்திய அமெரிக்கா, ருவண்டா, மொஸாம்பிக், சோமாலியா, சூடான், முன்னைய யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற ஆயுதப் போராட்டங்கள் ஆபிரிக்காவின் 11 தென் திசை நாடுகளில் இடம்பெற்ற தண்ணீர்ப் பஞ்சம், ஈக்குவடோர், லெபனான், பாகிஸ்தான், பராகுவே ஆகியவற்றில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கு, எகிப்து, இந்தோனேசியா, பாகிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி, நிகராகுவா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் நிகழ்ந்த எரிமலை வெடிப்பு எல்சல்வடோர், பேரு நாடுகளில் வாந்திபேதித் தொற்றுநோய், ஆபிரிக்க, ஆசியா, அமெரிக்கா கண்டங்களில் எயிட்ஸ் நோய்; இவையும் ஏனைய அவலங்களும் கோடிக் கணக்கான சிறுவர்களைப் பாதித்து போசாக்கின்மை, உளவியல் ரீதியான பாதிப்பு, கட்டுப்பாடற்ற நோய் நொடி ஆகியவற்றைத் தோற்றுவித்ததுடன் மேம்பாட்டுக்கு அவசியமான குடும்ப வாழ்வைக் குலைத்தும் வீடுகளின் பாதுகாப்பைப் பங்கப்படுத்தியுமுள்ளன.

## போரிற் சிக்கிய சிறுவர்கள்

*1992 இல் யுனிசெப் 50 பிரதான மனிதாபிமான நிவாரண முயற்சிகளில் ஈடுபட்டு, தனது மூலவளங்களில் 22 சத வீதத்தை ஆபத்தில் அவதியுற்ற சிறுவர்கள், பெண்கள் ஆகியோரின் தேவைகளுக்குப் பயன்படுத்தியது, இதுவரை காலமும் மேற்கொண்ட பணிகளில் மிகச் சிரமமான சேவை அப்பாவி மக்களுக்கு அவரச தேவையாக வேண்டப்பட்ட பொருள்களை வழங்கியவமையாகும். யுனிசெப் நிவாரண ஊழியர்களில் எழுவர் இவ்வாண்டில் மேற்படி பணியின்போது உயிரிழந்தார்கள். பல சந்தர்ப்பங்களில் எதிரணியினர், பரிதாபகரமான நிலையில் சிக்கிய சிறுவர்களுக்கும், பெண்களுக்கும் நிவாரணப் பொருள்களைச் ஏற்றிச் சென்ற கப்பல்களை வழிமறித்தோ தாமதமடையச் செய்தோ மனித உரிமைகள் மீது தமக்குள்ள அசிரத்தையை வெளிப்படுத்தினர். சில சந்தர்ப்பங்களில் யுனிசெப் குறுகிய கால யுத்த நிறுத்தங்களை ஏற்பாடு செய்து நிவாரணப் பொருள்களும், சேவைகளும், ஊழியர்களும் அபலைகளைச் சென்றடைவதற்கு வழிவகுத்தது. என்றாலும், தாமதத்தின் காரணமாக அப்பாவிகள் அநாவசியமாகத் துன்புறவும் உயிரிழக்கவும் நேர்ந்தது.*

## வன்செயல்களின் இலக்குகள்

*பல பிணக்குகளில் ராணுவத் தலைவர்கள் வேண்டுமென்றே சிறுவர்களையும் பெண்களையும் குறிவைத்துத் தாக்கியுள்ளமை தெளிவாகியுள்ளது. 11 அல்லது அதற்கும் குறைந்த வயதுள்ள சிறவர்களைக் கடத்திச் சென்று பலவந்தமாகப் பயிற்சியளித்து போர் முனைக்கு அனுப்பிய சம்பவங்கள் பல. தமது சொந்தக் குடும்பத்தவர்களையே கொல்லும்படி தூண்டப்பட்ட பாலியப்படை வீரர்கள் பற்றியும், எதிரியின் அரண்களைத் தகர்ப்பதற்கு அல்லது கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட போர்க்களரிகளை அணுகுவதற்குச் சிறுவர்களை அலை அலையாக முன்தள்ளிப் பலியாடுகளாக்கிய சம்பவங்கள் பற்றியும் பல அத்தாட்சிகள் உள்ளன. கண்ணி வெடிகளை விளையாட்டு பொம்மைகள் போன்ற வடிவங்களில் தயாரித்து சிறுவர்களின் கண்ணில் படக்கூடியதாகப் பாடசாலைகள், விளையாட்டுத் திடல்கள் போன்ற இடங்களில் பொறிவைத்த சம்பவங்களும் தெரியவந்துள்ளன. இளைஞர்கள், பெண்கள் ஆகியோரை எதிரணியினர் சுற்றி வளைத்துக் குரூரமாகக் கொலை செய்தும் கற்பழித்தும் சித்திரவதை செய்தும் பழிவாங்கிய சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இவ்வாறான குரூரமான அநாகரிக கொடுமைகளுக்கு ஒருபோதும் முடிவில்லைப் போலும். ஆசியாவின் பல பாகங்களில் எப்போதோ நடைபெற்று முடிந்த போர்களின் போது புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் இன்னமும் தற்செயலாக வெடிப்பதன் காரணமாக நாள்தோறும், பல சிறுவர்கள் இறக்க அல்லது ஊனமுற நேர்கிறது.*

## ஆயுதப் போரில் நேரடியாகப் பலியாவோர்

*கடந்த தசாப்த காலத்தில் 15 லட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் போரிற் கொல்லப் பட்டிருக்கிறார்கள். 40 லட்சத்துக்கும் கூடுதலானோர் அங்கவீனர்களாகி அவதியுற்றனர். சுமார் 50 லட்சம் பேர் யுத்தம் எப்போது முடியுமோவென்று எதிர்பார்த்தவாறு அகதி முகாம்களில் தவிக்கிறார்கள். மேலும் 12 மில்லியன் பேர் தமது இல்லங்களை இழந்திருக்கிறார்கள். ஆயுதப் பிணக்குகளை கண் முன்னால் கண்டதனால் சொல்லொணாத் தொகையினர் உளப்பாதிப்புக்குள்ளாகி உருகுகின்றனர். சூடானில் போரில் உயிரிழந்த ஒவ்வொரு வீரனுக்கும் 13 சிறுவர் உயிரிழந்துள்ளனவர் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. முன்னைய யூகோஸ்லாவியாவில் 300 சிறுவர்களை விசாரித்த போது 97 சத வீதமானோர் தாம் பீரங்கிக் குண்டுகளால் அல்லது கனரகப் பீரங்கிப் படையால் கண்டபடி தாக்கப்படாமல் எதிரிகளால் துப்பாக்கியால் குறிவைத்துச் சுடப்பட்டதாகத் (அதாவது தாம் சிறுவர்கள் எனத் தெரிந்துகொண்டே தாக்கப்பட்டதாகத்) தெரிவித்துள்ளார்கள்.*

1945ற்கு முற்பட்ட காலத்தில் போர்வீரர்களே யுத்தங்களில் பலியானார்கள். ஆனால் அதற்குப் பின்னர் நிகழ்ந்த 150 க்கும் அதிகமான யுத்தங்களில் இறந்த 20 மில்லியன் பேரிலும் காயமடைந்த 60 மில்லியன் பேரிலும் 80 சதவீதமானோர் குடிமக்களே, இவர்களிலும் பெரும்பாலானோர் அப்பாவிப் பிள்ளைகளும், பெண்களுமாவர்.

1945 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பெரும்பாலான யுத்தங்கள் வளர்முக நாடுகளிலேயே நடைபெற்றுள்ளன. அந்நாடுகளில் வறுமை, தண்ணீர்ப் பஞ்சம், பட்டினி மற்றும் இயற்கை உபாதைகளால் ஏற்பட்ட பளுக்களால் நிலைமை மேலும் சிக்கலடைந்தது.

வயது வந்தவர்கள் சர்வதேச சமுதாயத்தின் மிகச்சிறந்த சட்டவரம்புகளையும் மீறி உண்டாக்கும் பிணக்குகளால் பல தலைமுறைச் சிறுவர்கள் உயிரிழந்துள்ளார்கள்; உடலாலும் உணர்வாலும் ஊனமுற்றுள்ளார்கள். இந்தப் பைத்தியப் பேரழிவு முற்றுப்பெற வேண்டும். சமுதாயத்தில் வரையறைகள் இருக்க வேண்டுமானால் மக்கள் கட்டுப்பாடுகளுக்கு உட்படுதல் அவசியம்.

### மறைமுகமாகப் பாதிப்புறுவோர்

கடந்த 10 வருட காலத்தில் போர்களினால் 17 இலட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் பலியாகியுள்ளார்கள். குண்டுகளாலும், சன்னங்களாலும் உயிரிழக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் மேலாக மேலும் பலர் பலர்வேறு மறைமுகத் துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். பெற்றோரையும் குடும்பத்தவர்களையும் பிரிதல், வசிப்பிடம், ஆகாரம், தண்ணீர் விநியோகம், நோய்களுக்கு எதிராகத் தடுப்பு மருந்தேற்றல் போன்ற பிற அடிப்படைச் சேவைகளை இழத்தல் என்பன போரின் மறைமுக விளைவுகளாகும். வைத்தியசாலைகள், சிகிச்சை நிலையங்கள், பாடசாலைகள் ஆதியனவும் இவற்றை நடத்திய ஊழியர்களும் கூட அண்மையில் இடம்பெற்ற ஒரு பிணக்கில் போர் உபாயத்தின் இலக்குகளாக அமைந்தனர்.

ராணுவச் செலவினங்கள், புனரமைப்புச் செலவுகள், வட்டிக் கொடுப்பனவுகள் ஆதியன உலகின் வறிய நாடுகளின் குருதியை உறிஞ்சுகின்றன. இதனால் சிறுவர்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் அவசியமான சுகாதாரம், கல்வி மற்றும் செலவினங்களுக்கு ஒதுக்கப்படும் அற்ப சொற்ப மூலதனமும் அழிந்துபோகிறது.

## இலகுவில் வெளியே தெரியாத அவலங்கள்

வெகுசனத் தொடர்புத் துறையில் ஏற்பட்டிருக்கும் புரட்சியின் பயனாக மனித உரிமைகள் மீறப்படுவதையிட்டுச் சர்வதேச சமுதாயம் அறியாமையைக் காரணம் காட்டித் தப்பித்துக் கொள்ள இயலாமலிருக்கிறது. அரசியல்வாதிகள் கண்டும் காணாதவர்கள் போலப் பாவனை பண்ணலாம். ஆனால், உலகம் தொலைக்காட்சி ஊடகத்தின் விழிகளால் சாவையும், துன்பதுயரங்களையும் பக்கத்தில் இருந்து பார்ப்பது போல முழுவர்ணத்தில் பார்க்கிறது. துரதிர்ஷ்டவசமாக, தொலைக்காட்சியும் செய்தி ஊடகங்களும், அவலக் குரல் எழுப்பும் அவசர நிகழ்ச்சிகளின் பரபரப்பிலேயே நாட்டம் காட்டுகின்றன. சேரிகளிலும், வறிய கிராமங்களிலும் வயிற்றோட்டம் அல்லது சளிச்சுரம் போன்ற கொடிய நோய்களால் ஆண்டு தோறும் செத்து மடியும் பல லட்சக்கணக்கான பிள்ளைகள் பற்றி இந்த ஊடகங்கள் அக்கறை காட்டுவதில்லை. இதில் வருந்தத்தக்கதென்னவென்றால் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு சிறிய தொகைப் பணத்தை மாத்திரம் செலவிட்டால் இந்த மரணத்தையும் துன்பத்தையும் தடுக்கலா மென்பதை நாம் நன்கு அறிவோம் என்பதாகும். சிறுவர்களைக் கொல்லும் ஆறு

பிரதான நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்துகளை உபயோகிக்கவும், வயிற்றோட்டத்தினால் ஏற்படும் உடல் நீர்வற்றுதலைத் தடுக்க வாய்வழி மீளநீர் வழங்கவும், சில வகையான மனக்கோளாறுகளை நீக்கும் பொருட்டு அயடின் உப்பை வழங்கவும் எம்மிடம் ஆற்றல் உண்டு. இவை எல்லாம் பெரும் செலவை உருவாக்கும் செயற்பாடுகளல்ல.

## பெண்பிள்ளைகள்

மேம்பாட்டுக்குரிய மூலவளங்களைச் சர்வதேச சமுதாயம் பகிரும் முறையிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக்காட்டும் பொறுப்பும் சர்வதேச சமுதாயத்தைச் சாரந்ததாகும். பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் சமவாய்ப்புகளை மறுதலிக்கும் (ஆண் பெண் என்ற) பால்வாரியான பாகுபாடு மனித உரிமைகளைத் துஷ்ப்பிரயோகம் செய்வதாகவும் நிலைபேறான மேம்பாடு பற்றிய யதார்த்த ரீதியான எண்ணக் கருவுக்கு முரணானதாகவும் உள்ளது. பாடசாலை செல்லாதிருக்கும் 7 – 12 வயதுக்குட்பட்ட 10 கோடிப் பிள்ளைகளுள் மூன்றில் இரண்டு பங்கினர் பெண்களாவர். எந்த நாடும் அதன் மனிதவளத்தின் சரிபாதியைப் புறக்கணித்து முன்னேற முடியாது.

## கருணையின் பராமுகம்

அவலக் குரல் எழுப்பும் அபாயங்கள் தினமும் அதிகரித்து வருகின்றன. இதனால் உலகையும், எம்மைச் சூழ உள்ளோரின் துன்பங்களையும் கருணையுடன் நோக்கும் எமது ஆற்றல் மழுங்கிப் போய்விடுகிறது. இது மற்றொரு துர்ப்பாக்கியமாகும். நாளாந்தம் துன்பங்களைப் பற்றியே திரும்பத்திரும்ப வர்ணித்து வந்தால் மக்களின் இரக்க சுபாவம் குறைந்து பராமுக மனப்பான்மை தலைதூக்கி விடுகிறது.

இதனால் உண்டாகக் கூடிய நீண்டகால அபாயம், சிறுவர்களையும், அவர்களது வாழ்க்கையையும் சின்னாபின்னமாக்குதல், ஆயிரக்கணக்கான சிறுமிகளையும், இளம் பெண்களையும் ஈவிரக்கமின்றிக் கற்பழித்தல், கர்ப்பிணியாக்குதல் போன்ற குரூரச் செயல்கள் தொடர்ந்து நடைபெறும் போது சர்வதேச சமுதாயம் இவற்றுக்கு எதிராகக் குரல் எழுப்பத் தயங்குவதாகும். இதன் விளைவாகப் பொதுமக்களின் கருத்துக்கள் அமுங்கி விடுகின்றன. மனத்தால் எண்ணிக்கூடப் பார்க்க முடியாத குரூரச் சம்பவங்கள் காலக் கிரமத்தில் சாதாரணமானவையாகவும் அலட்டிக்கொள்ள அவசியமற்ற ஒன்றாகவும் மாறிவிடக்கூடும். வறுமை, இல்லாமை என்பனவும் இவ்வாறே ஆகிவிடலாம்.

## பராமுகம் எனும் சதி

அவலக்குரல் எழுப்பும் அவசர நிலைமைகள் பற்றி வெகுசன ஊடகங்கள் பரபரப்பான செய்திகளை வெளியிடும்போது, எந்தப் போரிலும், இயற்கை அழிவுகளிலும் அதேபோன்று எந்தப் பஞ்சத்திலும் பட்டினியிலும் ஒரே நாளில் 35,000 சிறுவர்கள் பலியானதில்லை என்பதை உலகோருக்கு நினைவூட்டுதல் அவசியம். உலகின் பின்தங்கிய சமுதாயங்களில் வறுமை, எழுத்தறிவின்மை, மற்றும் செலவு குறைந்த அடிப்படையான உயிர்காக்கும் நுட்பங்கள் கிடையாமையால் நிகழும் “ஓசையற்ற” அவசர நிலைமைகளால் நாள்தோறும் பலியாவோரின் எண்ணிக்கை இதைவிட அதிகம் என்பது எத்தனைபேருக்குத் தெரியும்? பொருளாதார, சமூக, கலாசார, குடியியல், அரசியல் உரிமைகள் பகிர முடியாதன என்பதை ஏற்றுக்கொண்டமைக்காக, சர்வதேச சமுதாயம் மனித உரிமைகள் பற்றிய

சர்வதேசப் பிரகடனத்தைப் (1948) போற்றி வரவேற்றது. இந்த உரிமைகளை மேற்படி பிரகடனம், "பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், அச்சம், வறுமை (இல்லாமை) ஆகியவற்றில் இருந்து விடுதலை" எனச் சுருக்கியுள்ளது.

இல்லாமையிலிருந்து (அதாவது வறுமையிலிருந்து) விடுதலை பெறும் விஷயத்திலும், உள்ளாரை, இல்லாதாரிடமிருந்து பிரித்து வைக்கின்ற பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் விஷயத்திலும் ஒரு மௌனச் சதி நிலவுகிறது.

உலகின் நூறு கோடி மக்களில் ஐந்தில் ஒருவர் தமது நாளாந்த சீவியத்தை ஒரு டொலருக்கும் (சுமார் ரூபா 56/-) குறைந்த வருமானத்துடன் சமாளிக்கத் திண்டாடு கின்றார்கள். ஏழைகளின் குடியுரிமை மற்றும் அரசியல் உரிமைகள் பற்றி உலகின் வளம் கொழிக்கும் நாடுகள் சில குரல் எழுப்பும் அதே வேளையில் அவர்களின் பொருளாதார, சமூக, உரிமைகள் பற்றி எவரும் பேசுவதில்லை. சில சமயங்களில் இவற்றை இலக்குகள், அபிலாசைகள் என்று மட்டும் குறிப்பிடுகின்றார்கள்.

## சமவாயமும் உலக உச்சி மாநாடும்

இந்த உரிமைகள் பற்றிய பூரணமான இரத்தினச் சுருக்கமான விளக்கமும் சிறுவர்கள் சார்பாகச் சர்வதேச சமுதாயம் வெளியிட்ட குறிக்கோள்களும் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் 54 உறுப்புரைகள், சிறுவர்க்கான உலக உச்சி மாநாட்டின் பிரகடனம், செயல் திட்டம் ஆகியவற்றிற் காணப்படுகின்றன. பின்னைய பிரகடனத்திலும் செயற் திட்டத்திலும் 139 அரச தலைவர்கள் ஒப்பமிட்டுள்ளார்கள்.

சமவாயம் 1989 இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு சரியாக ஒன்பது மாதத்துள் நடைமுறைக்கு வந்தது. இது சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை எதுவும் ஈட்டாத ஒரு சாதனையாகும். 1997 மார்ச் அளவில் 191 நாடுகள் அதனை ஏற்று உறுதிப்படுத்தியிருந்தன. ஐக்கிய அமெரிக்கா, சோமாலியா ஆகிய இரு நாடுகளும் இவ்வாறு செய்யும் பட்சத்தில் உலகின் அனைத்து நாடுகளும் இதனை ஏற்று அங்கீகரித்ததாக அமையும். சிறுவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் காணும் முன்னேற்றத்தை அளவிடும் சட்டக் கோலாக அது விளங்குகிறது. சிறுவர்க்கான உலக உச்சி மாநாட்டின் விளைவாக உருவாக்கப்பட்ட தேசிய செயற்திட்டங்கள், சமவாயத்தின், முக்கிய உறுப்புரைகளை நிறைவேற்றுதவற்கான கட்டுக்கோப்பாக அமைகின்றன. யுனிசெப்பின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் சகல திட்டங்களும், தேசிய செயற் திட்டங்களும் சிறுவர்க்கான இலக்குகளையும் 1990 களில் ஏற்பட வேண்டிய முன்னேற்றத்தையும் பிரதிபலிக்கின்றன. இவை சமவாயத்தின் கட்டுப்பாடுகளையும் உலக உச்சி மாநாட்டின் குறிக்கோள்களையும் நிறைவேற்றுமுகமாக வகுக்கப்பட்டவையாகும்.

### அமுலாக்கம்

சிறுவர் உரிமைகள் மீதான செயற்குழு, சிறுவர் உரிமைகள் மற்றும் சேமநலன் ஆகியவற்றில் செம்மைசான்ற 10 நிபுணர்களைக் கொண்டதாகும். இவர்கள் சமவாயத்தின் பங்காளி நாடுகளில் ஒவ்வொன்றும் தத்தமது சிறுவர்கள் சார்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டுத் தெரிவு செய்யப்பட்டவர்களாவர். சமவாயத்தை உறுதிப்படுத்தும் நாடுகள், சமவாயத்தின் கோட்பாடுகளை நிறைவேற்றுவதிற் காணும் முன்னேற்றம் பற்றி ஈராண்டு காலத்துள் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். 1993 மே வரையில் 16 நாடுகளின் அறிக்கைகள் செயற்குழுவுக்குக் கிடைத்துள்ளன.

அமுலாக்கல் தொடர்பாகச் சமவாயம் மேற்கொள்ளும் அணுகுமுறைக்கு அமைய, சமவாயத்தின் நியமங்கள் முற்றாகக் கைகூடச் செய்வதில் அரசாங்கங்களுக்கு உதவு முகமாக, முட்டி, மோதிக் கொள்வதைத் தவிர்த்து ஆக்கபூர்வமான கலந்துரையா டல்களையே செயற்குழுவினர் நாடுகின்றனர். பொருளாதார சமூகத்துறைகள் சார்ந்த கட்டுப்பாடுகளை நிறைவேற்றுவது வறிய நாடுகளுக்குச் சிரமமென்பதைச் சமவாயம் ஒப்புக் கொண்டு, தொழில்நுட்பம், நிதி என்பன சம்பந்தமான இடர்ப்பாடுகளை வெற்றிகொள்வதற்கு சர்வதேச ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டுமெனக் கோருகிறது. யுனிசெப் நிறுவனம், ஐக்கிய நாடுகளின் சிறுவர்க்கான முன்னணி முகவர்நிலையம் என்ற வகையிலே, 1990 களில் சிறுவர்களுக்கான இலக்குகளையும், மேம்பாட்டையும் அடையும் பொருட்டும் சமவாயத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டும் வளர்முக நாடுகளில் கிரமமான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வரையறைக்குள் அரசாங்கங்களுடனும், அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் இணைந்து பணியாற்றி வருகிறது. அத்துடன் உலகளாவிய பிரசாரப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

சமவாயம் சிறுவர்களுக்கு நன்மை பயக்கும் கோட்பாடுகள், நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டுக்கோப்பாகும். 1991 இல் யுனிசெப்பின் நிர்வாக சபை, சமவாயத்தில் அடங்கியுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் வளர்முக நாடுகளுடன் ஒத்துழைக்குமாறு யுனிசெப்புக்கு உற்சாகமூட்டியது. இந்த ஒத்துழைப்பு பின்வரும் விடயங்களில் அமையவேண்டுமென்று வரையறுக்கப்பட்டது:

- ★ சிறுவர்கள் பற்றி பால் வாரியானதும் பிராந்திய வாரியானதுமான தரவுகளைத் திரட்டுவதற்கான தேசிய அமைப்புகளை விருத்தி செய்தல்.
- ★ சிறுவர்கள் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்தல்.
- ★ சமவாயம் சார்ந்த விடயங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.
- ★ யுனிசெப் ஊழியர்களுக்கு சமவாயம் பற்றிப் பயிற்சி அளித்தல், அரசாங்கங்களில் அதே துறையில் உள்ள சகாக்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் சமவாயம் தொடர்பான அறிவைப் புகட்டுதல்.

## 1990 களின் இலக்குகள்

சிறுவர்க்கான உலக உச்சிமாநாட்டின தீர்மானப்படி, 1990களில் எய்தவேண்டிய இலக்குளில் பின்வருவனவும் அடங்கும்:

- போசாக்கின்மை, வயதுவந்தோரின் எழுத்தறிவின்மை, தாய்மைப்பேற்று மரணவிகிதாசாரம் ஆகியவற்றை 50 சதவீதமாகக் குறைத்தல்;
- அடிப்படைக் கல்வி, பாதுகாப்பான குடிநீர், வடிகால் வசதிகள் என்பன அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்.
- சிறுவர்களைக் கொல்லும் பிரதானமான நோய்களுக்கெதிராக உலக சிறுவர்களுள் 90 சத வீதத்தினருக்குத் தடுப்பு மருந்தேற்றல்.

இவற்றையும் உச்சி மாநாட்டின் ஏனைய இலக்குகளையும், கைவசமுள்ள செலவு குறைந்த தொழில் நுட்பங்கள், நிரூபணமான நடைமுறைகள், சொற்ப அளவு மேலதிக பணச் செலவு ஆகியவற்றைப் பயன்படுத்திச் சாதிக்க முடியுமென யுனிசெப் உறுதியாக நம்புகிறது. வளர்முக நாடுகளில் இந்த இலக்குகளை எய்துவதற்கு ஆண்டுதோறும் மேலதிகமாக 250 கோடி அமெரிக்க டொலர் போதுமானதென்று கணிக்கப்பட்டிருக்கிறது. இதில் பெரும் பகுதியை கைவசமிருக்கும் வளங்களில் முதல் உரிமையைச் சிறுவர்களின் நலனுக்குப் பயன்படுத்தும் வகையில் தேசிய வரவு செலவுத்திட்டங்களையும் உத்தியோகபூர்வமான மேம்பாட்டு உதவிகளையும் மீள வகுப்பதன் மூலம் தேடிக் கொள்ளலாம்.

தற்போது வளர்முக நாடுகளின் அரசாங்க செலவினங்களில் சுமார் 10 சதவீதமே போசாக்கு, சுகாதாரப் பராமரிப்பு, நீர் விநியோகம், வடிகால் அமைப்பு, ஆரம்பக் கல்வி, குடும்பத்திட்டம் ஆகிய அடிப்படை விடயங்களுக்கு ஒதுக்கப்படுகின்றது. தொழில்மய நாடுகள் கூட இந்த முதன்மை வாய்ந்த மனித தேவைகளுக்கு 10 சத வீத உத்தியோகபூர்வ மேம்பாட்டு உதவியையே வழங்குகின்றன. இந்த விகிதாசாரத்தை 20 சத வீதமாக உயர்த்த முடியுமானால் 1990 களில் சுமார் 3 கோடி உயிர்களைக் காப்பதுடன் மேலும் பல நன்மைகளைச் சிறுவர்கள் பெற முடியுமென யுனிசெப் மதிப்பிட்டுள்ளது.

இத்தகைய வாய்ப்பு இருக்கும்போது தோல்வியடைவதற்குக் காரணமே இல்லை, இவற்றை உறுதிப்படுத்துவதற்கான நுட்பமும் வளமும் சர்வதேச சமுதாயத்திடம் உள்ளன.

சிறுவர்களின் உயரிய நலன்கள் உலகளாவியவை; அவற்றில் உயர்வு, ஆரோக்கியமான முன்னேற்றம், துஷ்ப்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பு ஆகியவற்றுக்கான உரிமையும் அடங்கியுள்ளது. இந்த உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவை சர்வதேச நியமங்கள். ஆயினும் பட்டினி, பசி, வறுமை, சித்திரவதை, கற்பழிப்பு, சிறுவர்களைச் சுரண்டி வாழ்தல் ஆகியவற்றைக் கண்டும் காணாதது போல நடந்து கொள்ளும் உலகில் இவற்றுக்கு என்ன மதிப்பு கிடைக்கப்போகிறது?

வயது வந்தவர்கள் சிறுவர் பால் தமக்குள்ள கடமைகளைப் பற்றி வீணே அசைபோட்டுக் கொண்டிருக்கும் வரை சிறுவர்களின் வாழ்க்கையை உறுதியுடன் நிலைகொள்ளச் செய்ய ஒருபோதும் இயலாது: பகிரங்க ஒப்புதல்கள் வழங்கப்பட்டுவிட்டன. உடன்படிக்கைகள் எழுதப்பட்டு உறுதியும் செய்தாகிவிட்டது. செயலில் இறங்கவேண்டிய வேளை இதுவே. இனியாவது முயற்சி எடுப்போமா?